# பாதுகாத்துக் கொள்ளுங்கள்

## உங்கள் வீட்டை அது உங்களைப் பாதுகாப்பதைப் போல



# எச்டிஎஃப்சி எர்கோ-வின்

# பாரத் கிரிஹா ரக்ஷா பாலிசி!

HDFC ERGO

## எச்டிஎஃப்சி எர்கோ-வின்

# பாரத் கிரிஹா ரக்ஷா பாலிசி!

வீட்டு கட்டடங்கள் மற்றும்/அல்லது வீட்டிலுள்ள பொருள்களுக்குக் காப்பீடு வழங்குகிறது

**காப்பீடு**

**வீட்டுக் கட்டட காப்பீடு,**
வீட்டுக் கட்டடத்திற்கு இழப்பு, சேதம் அல்லது அழிவு ஆகியவற்றிற்குக் காப்பீடு வழங்கும்.

**வீட்டிலுள்ள பொருள்களுக்குக் காப்பீடு,**
வீட்டிலிருப்பவை அல்லது வீட்டில் வைத்திருக்கும் பொருள்களுக்கு காப்பீடு வழங்கும்.

**ஆப்ஷனல் காப்ப்பீடுகள்:**
- விலை மதிப்பு மிக்கவைகளுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பு அடிப்படையில் காப்பீடு வழங்கும்
- தனிநபர் விபத்து காப்பீடு

# காப்பீடு பாதுகாப்புகளின் தொகுப்பு

பாலிசி வருடத்தில் ஒருவேளை கீழ்க்கண்ட எதிர்பாராத நிகழ்வுகளால் வீட்டுக்கட்டடம் அல்லது வீட்டிலிருக்கும் பொருள்கள் அல்லது வீட்டிலிருப்பவைகளுக்கு இழப்பு, சேதம் அல்லது அழிவு ஏற்பட்டால், எச்டிஎஃப்சி எர்கோ கீழே கொடுத்திருப்பது போல் காப்பீடு வழங்கும்:

| காப்பீட்டின் பெயர் | உங்கள் இழப்பு | நாங்கள் செலுத்துவது | காப்பீடு வகை |
|---|---|---|---|
| வீட்டுக் கட்டட காப்பீடு | கட்டடம் சேதமடைதல் | ரிப்பேர் செலவினங்கள், ஆர்கிடெக்ட், சர்வேயர், கன்சல்டிங் இஞ்சினியர் கட்டணங்கள்,<br><br>இடிபாடுகளை அகற்றும் செலவினங்கள்,<br><br>வாடகை வருமானம் இழப்பு அல்லது மாற்று இடத்திற்கு வாடகை | ஸ்டாண்டர்டு |
| வீட்டுக் கட்டட காப்பீடு | கட்டடம் முழுவதும் அழிந்துவிடுதல் (ஒட்டுமொத்த அழிவு) | கட்டுமானச் செலவினங்கள் | ஸ்டாண்டர்டு |
| வீட்டிலிருப்பவை | பொதுவாக வீட்டிலிருப்பவை சேதமடைதல் | ரிப்பேர் செலவினங்கள் | ஸ்டாண்டர்டு |
| காப்பீடு | வீட்டிலிருக்கும் உருப்படிகள் அல்லது பொருள்கள் இழப்பு அல்லது அழிவு (ஒட்டுமொத்த அழிவு) | அந்த பொருளுக்குப் பதிலாக வேறு பொருள் அல்லது அதைப் போன்ற பொருளுக்கு ஆகும் செலவினம் | வீட்டுக் கட்டடத்திற்கு |
| தனிநபர் விபத்து காப்பீடு | காப்பீடு செய்து கொண்டிருக்கும் அபாயங்கள் ஒன்றின் காரணமாக உங்கள் வீடு மற்றும்/அல்லது அதிலிருப்பவை சேதமடைவதுடன் அசம்பாவிதமாக உங்களுக்கு அல்லது உங்கள் வாழ்க்கைத் துணைக்கு மரணம் நிகழ்தல் | ரூ.5,00,000/- ஒரு நபருக்கு | ஆப்ஷனல் |
| விலை மதிப்பு மிக்கவைகளுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பு அடிப்படையில் (வீட்டிலுள்ள பொருள்களுக்குக் காப்பீடு திட்டத்தின் கீழ்) | விலை மதிப்பு மிக்கவைகளுக்கு பௌதீக ரீதியான சேதம் ஏற்படுதல் | ரிப்பேர் செலவினங்கள் | ஆப்ஷனல் |
| விலை மதிப்பு மிக்கவைகளுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பு அடிப்படையில் (வீட்டிலுள்ள பொருள்களுக்குக் காப்பீடு திட்டத்தின் கீழ்) | விலை மதிப்பு மிக்கவை மொத்தமாக அழிந்து போதல் | ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பு | ஆப்ஷனல் |

# எந்தெந்த எதிர்பாராத நிகழ்வுகளுக்கு காப்பீடு வழங்கப்படுகிறது?

பாலிசி காலத்தில் காப்பீடு பெற்றிருக்கும் சொத்துகளுக்கு கீழ்க்கண்ட எதிர்பாராத நிகழ்வுகளால் ஏற்படும் பௌதீக இழப்பு அல்லது சேதம் அல்லது அழிவுக்கு நாங்கள் காப்பீடு வழங்குகிறோம்.

பத்தி அ-வில் காப்பீடு பெற்றிருக்கும் நிகழ்வுகளும், பத்தி ஆ-வில் காப்பீடு பெற்றிருக்காத நிகழ்வுகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

| | பத்தி A | பத்தி B |
|---|---|---|
| | கீழ்க்கண்ட நிகழ்வுகளால் காப்பீடு பெற்றிருக்கும் சொத்துகளுக்கு ஏற்படும் பௌதீக இழப்பு அல்லது சேதம் அல்லது அழிவுகளுக்கு நாங்கள் காப்பீடு வழங்குகிறோம் | கீழ்க்கண்ட நிகழ்வுகளால் காப்பீடு பெற்றிருக்கும் சொத்துகளுக்கு ஏற்படும் பௌதீக இழப்பு அல்லது சேதம் அல்லது அழிவுகளுக்கு நாங்கள் காப்பீடு வழங்கவில்லை |
| 1 | தீ விபத்து | பொது அதிகாரம் மேற்கொள்ளும் காப்பீடு பெற்றிருக்கும் சொத்துகளை எரித்தல் நடவடிக்கை |
| 2 | வெடித்தல் அல்லது குமுங்குதல் | - |
| 3 | மின்னல் | - |
| 4 | நிலநடுக்கம், எரிமலை வெடித்தல் அல்லது இதர பிற இயற்கை வலிப்புகள் | - |
| 5 | புயல், சூறாவளி, கடும் புயல், கொந்தளிப்பு, பெரும்புயல், சூறைப்புயல், சுனாமி, வெள்ளம் மற்றும் மூழ்கடித்தல் | - |
| 6 | உங்கள் வீட்டு கட்டப்பட்டிருக்கும் நிலம் தரையமிழ்தல், நிலச்சரிவு, பாறைசரிவு | இவைகளால் நிகழ்தல்<br>a. புதிய கட்டுமானங்களில் விரிசல், செட்டில்மென்ட் அல்லது பெட்டிங் டவுன்<br>b. கட்டப்பட்டிருக்கும் நிலம் செட்டில்மென்ட் ஆதல் அல்லது நகர்தல்<br>c. கடலோர அல்லது நதியோர மண்அரிப்பு<br>d. வடிவமைப்பு குறைபாடு அல்லது வேலைத்திறன் குறைபாடு அல்லது தரமற்ற பொருள்கள் பயன்பாடு, அல்லது<br>e. அழித்தல், கட்டுமானம், கட்டமைப்பில் மாற்றங்கள் அல்லது சொத்துக்களை ரிப்பேர் செய்தல் அல்லது நிலத்தில் வேலை செய்தல் அல்லது அகழ்தல். |
| 7 | புதர் தீ, கானக தீ, காட்டு தீ | - |

| | பத்தி A | பத்தி B |
|---|---|---|
| 8 | ஏதாவது ஒரு அதிர்ச்சி சேதம் அதாவது வெளியிலிருக்கும் பௌதீக பொருளுடன் மோதுவதால் ஏற்படும் அதிர்ச்சி (உ-ம். வாகனம், மரம் முறிந்து சரிதல், விமானம், சுவர் ஆகியவை) | சோனிக் அல்லது சூப்பர்சோனிக் வேகத்தில் பறக்கும் விண்வெளிச் சாதனங்கள், விமானங்கள் அல்லது இதர பிற விண்வெளிப் பொருள்கள் பறப்பதால் ஏற்படும் அழுத்த அலைகள் காரணமாக ஏற்படும் அதிர்ச்சிகள் |
| 9 | ஏவுகணை பரிசோதனை நிகழ்வுகள் | - |
| 10 | கலகம், வேலை நிறுத்தம், கெடு நோக்கத்துடன் சேதம் விளைவித்தல் | இவைகளால் நிகழ்தல்<br>a. அரசு ஆணை அல்லது ஒரு சட்டபூர்வ அதிகார உத்தரவின் காரணமாக தற்காலிக அல்லது நிரந்தர உடைமையைப் பறித்தல், பறிமுதல், கட்டளையிடுதல், கோரிக்கை விடுத்தல் அல்லது அழித்தல் நடவடிக்கையால் இவை ஏற்படலாம், அல்லது<br>b. யாரோ ஒருவர் சட்டவிரோத ஆக்ரமிப்பினால் உங்கள் வீட்டைத் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக உங்களிடமிருந்து பறித்துக்கொள்ளலாம். |
| 11 | தீவிரவாத நடவடிக்கை (இணைக்கப்பட்டிருக்கும் தீவிரவாத பிரிவு அனுசரித்து காப்பீடு வழங்கப்படும்) | இணைக்கப்பட்டிருக்கும் தீவிரவாத நடவடிக்கை பிரிவு அனுசரித்த விலக்கல்கள் மற்றும் விதிமீறல்கள் |
| 12 | தண்ணீர் தொட்டிகள், கருவிகள் மற்றும் பைப்புகள் வெடித்தல் அல்லது நிரம்பி வழிதல் | - |
| 13 | ஆட்டோமேடிக் ஸ்பிரிங்க்ளர் அமைப்புகளிலிருந்து நீர்கசிவு | a. உங்கள் வீட்டில் அல்லது நீங்கள் வசிக்கும் வீடு இருக்கும் கட்டிடத்தில் செய்யப்படும் பழுது சரிபார்த்தல் அல்லது திருத்தி அமைத்தல் நடவடிக்கைகள்<br>b. பொருத்தப்பட்டிருக்கும் ஸ்பிரிங்க்ளர் அமைப்பில் ரிப்பேர், அகற்றுதல் அல்லது நீட்சி செய்தல், அல்லது<br>c. உங்களுக்குத் தெரிந்திருக்கும் கட்டுமான குறைபாடுகள். |
| 14 | மேலே சொல்லப்பட்டு காப்பீடு வழங்கப்பட்டிருக்கும் இடர்கள் காரணமான மற்றும் அதைச் சார்ந்து நிகழ்வு நடந்த தினத்திலிருந்து 7 நாட்களுக்குள் நிகழும் திருட்டு. | இதனால் என்றால்<br>a. ஏதேனும் ஒரு பொருள் உங்கள் வீட்டிற்கு வெளியில் திருடு போதல். அல்லது<br>b. உங்கள் வீட்டின் வெளிச்சுவர்களில் அல்லது கூரையில் பத்திரமாகப் பதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், அந்த பொருள் |

# காப்புறுதி தொகை:

## வீட்டுக் கட்டடத்திற்காக:

பாலிசி ஆரம்பமாகும் தேதியில் உங்கள் வீட்டு கட்டடம் கட்டப்படுவதற்கு ஆகும் செலவினங்கள் நாளது தேதியில் ஆகும் செலவின வீதமாக இருக்கும், இந்த வீதம் தொகை வீட்டின் சொந்தக்காரர் குறிப்பிட்டு எச்டிஎஃப்சி எர்கோ ஏற்றுக்கொண்டதாக இருக்கும், காப்புறுதி தொகையைப் பொருத்து பிரீமியம் கணக்கிடப்படும்.

வீட்டு சொந்தக்காரர் ஆண்டுதோறுமானபாலிசியை வாங்கியிருந்தால், காப்புறுதி தொகை தானாகவே அதிகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும், இது பாலிசி வருட ஆரம்ப தேதியிலிருந்து 10% த்தில் 1/365 வீதம் தானாகவே ஒவ்வொரு நாளிலும் காப்புறுதி தொகை அதிகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும். பாலிசி காலவரை ஓராண்டிற்கும் அதிகமாக இருக்கும் பட்சத்தில், உங்கள் காப்புறுதி தொகையை பாலிசி காலத்தில் வருடந்தோறும் பாலிசி கால வருட இறுதியில் 10% தானாகவே அதிகரிக்கப்படும், ஆரம்பமாகும் தேதியில் இருந்த காப்புறுதி தொகை 100% வரை அதிகரிக்கப்படும். இதற்கு கூடுதல் பிரீமியம் எதுவும் செலுத்தத் தேவையில்லை.

## வீட்டிலிருக்கும் பொருள்களுக்காக:

பாலிசி அட்டவனையில் குறிப்பிடப்பட்டிருக்கும் காப்புறுதி தொகை அளவே இந்த பாலிசியின் கீழ் அதிகபட்ச காப்பீடு தொகை வாங்கப்படும்.

வீட்டு கட்டட காப்பீடு காப்புறுதி தொகையில் 20% க்குச் சமமான தொகைக்கு பொதுவாக வீட்டிலிருக்கும் பொருள்களுக்கு காப்பீடாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது, இத் தொகை அதிகபட்சம் ரூ.10 இலட்சமாக (ரூபாய் பத்து இலட்சம்) இருக்கும் என்றாலும் இதற்கு நீங்கள் வீட்டு கட்டடம் மற்றும் விட்டிலிருக்கும் பொருள்களுக்கு காப்பீடு செய்துகொண்டிருக்க வேண்டும். வீட்டு சொந்தக்காரர் அதிக தொகைக்கு வீட்டிலிருக்கும் பொருள்களுக்கு காப்பீடு பெற விரும்பும் பட்சத்தில், காப்புறுதி தொகையை விண்ணப்பத்தில் குறிப்பிட்டு அதற்கான கூடுதல் பிரீமியத்தை செலுத்த வேண்டும்.

ஒருவேளை வீட்டிலிருக்கும் பொருள்களுக்கு மட்டுமே காப்பீடு வாங்கியிருந்தால், வீட்டிலிருக்கும் பொதுவான பொருள்களுக்கான காப்புறுதி தொகையை விண்ணப்பப் படிவத்தில் அறிவித்திருக்க வேண்டும். வீட்டிலிருக்கும் பொருள்களுக்காக நீங்கள் தேர்வு செய்யும் காப்புறுதி தொகை பொதுவாக வீட்டிலிருக்கும் பொருள்களை மீண்டும் நிர்மாணிக்கத் தேவைப்படுவதற்குப் போதுமானதாக இருக்க வேண்டும்.

வீட்டு சொந்தக்காரருக்கு எச்டிஎஃப்சி எர்கோ காப்புறுதி தொகை முழுவதையும் ஏதாவது ஒரு காப்பீட்டிற்காக அல்லது காப்பீடு செய்யப்பட்டிருக்கும் ஒரு உருப்படிக்காக தொகை செலுத்தும் போது, அந்த அளவில் பாலிசி ஒரு முடிவுக்கு வந்துவிடும். இதைத் தவிர்த்து, காப்பீடு அதன் முழு காப்புறுதி தொகையுடன் பாலிசி காலம் முழுவதற்கும் பராமரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும். சொந்தக்காரர், விகிதப்படியான தொகையை மட்டுமே கூடுதல் பிரீமியத்திற்குச் செலுத்த வேண்டும். இதன் மூலமாக வீட்டுக் கட்டடம் மற்றும் அதிலிருக்கும் பொருள்கள் முழு காலத்திற்கும் காப்பீடு பெற்றிருப்பதை உறுதி செய்யும்.

**இந்த பாலிசியை யார் வாங்க வேண்டும்?**

1. வீட்டு சொந்தக்காரர் அல்லது வீட்டில் குடியிருப்பவர், காப்பீடு பெற பொறுப்புள்ளவர் பாலிசியை வாங்கலாம்.
2. பாலிசி காலவரை ஒரு வருடம் அல்லது அதற்கு மிகையாக இருக்கலாம் என்றாலும் 10 வருடங்களுக்கு மிகையாக இருக்க முடியாது.



# வீட்டுக் கட்டட காப்பீடு

இந்த காப்பீட்டை வீட்டிற்காக, அதாவது கட்டடம், ஃபிளாட், அபார்ட்மென்ட், டூப்ளெக்ஸ் அபார்ட்மென்ட், பங்களா அல்லது எந்த ஒரு வசிப்பிடத்திற்காகவும் வாங்கலாம். ஃபிட்டிங்குகள் மற்றும் ஃபிக்ஸ்சர்கள் இதில் அடங்கியிருக்கும். கெராஜுகள், வீட்டு உபயோக வசிப்பிட அவுட்ஹவுஸ், காம்பவுண்ட் சுவர்கள், வேலிகள், கேட், தாங்கு சுவர்கள் மற்றும் உட்புற சாலைகள், பார்க்கிங் இடங்கள், வீட்டு உபயோக நீர் தொட்டிகள் ஆகியவையும் காப்பீடு செய்யப்படும்.

## யாரெல்லாம் இந்த காப்பீட்டை வாங்க முடியும்?

1. கட்டட சொந்தக்காரர்
2. விற்பனை ஒப்பந்தம் மூலமாக வீட்டை வாங்கி அதில் குடியிருப்பவர்
3. வீட்டில் குடியிருக்க அதிகாரமளிக்கப்பட்டவர்
4. கட்டுமானத்தில் வாடகைக் குடி, உரிமம் அளிக்கப்பட்டவர் அல்லது ஒரு நிறுவன பணியாளர்
5. எழுதப்பட்ட ஒப்பந்தம் மூலம் குடியிருப்பவர் மற்றும் காப்பீடு பெற கடமைப்பட்டவர்
6. வசிப்பிடப் பயன்பாடு

## காப்பீட்டிற்கான காப்புறுதி தொகை:

பாலிசி ஆரம்பமாகும் தேதியில் உங்கள் வீட்டு கட்டடம் கட்டப்படுவதற்கு ஆகும் செலவினங்கள் நாளது தேதியில் ஆகும் செலவின வீதமாக இருக்கும், இந்த வீதம் தொகை வீட்டு சொந்தக்காரர் குறிப்பிட்டு எச்டிஎஃப்சி எர்கோ ஏற்றுக்கொண்டதாக இருக்கும்.

## குறைந்த காப்பீடு எதுவுமில்லை

இந்த பாலிசியில் குறைந்த காப்பீடு எதுவும் பொருந்தாது, இதுவே இந்த பாலிசியின் தனிசிறப்பாகவும் உள்ளது. சொந்தக்காரர் எங்களுக்கு அறிவித்திருக்கும் விவரங்கள் அடிப்படையில் காப்புறுதி தொகை கணக்கிடப்படுவதால், ஒருவேளை அத்தொகை சொத்தின் உண்மையான மதிப்பை விட குறைவாக இருந்தாலும், எச்டிஎஃப்சி எர்கோ நிறுவனம் செலுத்தும் தொகையை ஒருபோதும் பாதிக்காது.

## இதில் உள்ளடங்கியிருக்கும் காப்பீடுகள்:

a. ஆர்கிடெக்ட், சர்வேயர், கன்சல்டிங் இஞ்சிஜியர்களின் நியாயமான கட்டணங்கள் கிளெய்ம் தொகையில் 5% வரை;

b. சேதம் நிகழ்ந்திருக்கும் இடத்திலிருந்து இடிபாடுகளை அகற்றும் நியாயமான செலவினங்கள் கிளெய்ம் தொகையில் 2% வரை.



# வீட்டிலுள்ள பொருள்களுக்கு காப்பீடு

## காப்பீடு பெறும் பொருள்கள்:

ஒரு வீட்டில் பொதுவாக இருக்கக்கூடிய பொருள்கள், அதாவது, ஃபர்னிச்சர் மற்றும் ஃபிட்டிங்குகள், டெலிவிஷன் செட்டுகள், தொலைபேசிகள், எலக்டிரானிக் உருப்படிகள், அன்டெனா, நீர் சேமிப்பு சாதனங்கள், ஏர் கண்டிஷரர்கள், சமையலறை சாதனங்கள் மற்றும் இதர பிற வீட்டு உபயோகப் பொருள்கள்.

நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், பெயின்டிங்குகள், கலையம்சம் பொருந்தியவைகள், விலை மதிப்பு மிக்க கம்பளங்கள், தொல்பொருள்கள், விந்தைப் பொருள்கள், பெயின்டிங்குகள் போன்ற விலை மதிப்புள்ளவைகளுக்கு கூடுதல் பிரீமியம் செலுத்தி காப்பீடு பெற்றுக்கொள்ளலாம்.

தங்கப்பாளம் அல்லது பதிக்கப்படாத விலை மதிப்புமிக்க கற்கள், கையெழுத்துப் பிரதிகள், வாகனங்கள், வெடிபொருள் போன்றவைகளுக்குக் காப்பீடு கிடைக்காது.

## காப்புறுதி தொகை:

வீட்டு கட்டட காப்பீடு காப்புறுதி தொகையில் 20% க்குச் சமமான தொகைக்கு பொதுவாக வீட்டிலிருக்கும் பொருள்களுக்கு காப்பீடாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது, இத் தொகை அதிகபட்சம் ரூ.10 இலட்சமாக (ரூபாய் பத்து இலட்சம்) இருக்கும் என்றாலும் இதற்கு நீங்கள் வீட்டு கட்டடம் மற்றும் விட்டிலிருக்கும் பொருள்களுக்கு காப்பீடு செய்துகொண்டிருக்க வேண்டும்.

வீட்டிலிருக்கும் பொருள்களுக்கு மட்டுமே காப்பீடு பெற, பொதுவாக வீட்டிலிருக்கும் பொருள்களைப் பட்டியலிட்டு ஒவ்வொன்றிற்கான காப்பீடு தொகையை அறிவிக்க வேண்டும். பாலிசியை வாங்கும் சமயத்தில் அந்த பொருள்களுக்குப் பதிலாக மாற்றுப் பொருள்களுக்கான விலைகளுக்குச் சமமான தொகைக்கு காப்பீடு தொகை இருக்க வேண்டும்.

## யாரெல்லாம் இந்த காப்பீட்டை வாங்க முடியும் ?

1. இந்த உருப்படிகள் அல்லது பொருள்களின் சொந்தக்காரர்
2. இந்த பொருள்களை தொகை செலுத்தி வாங்கியிருக்க வேண்டும் அல்லது தவணை முறையில் அல்லது தவணை முறையில் விலைக்கு வாங்கியிருக்க வேண்டும் அல்லது குத்தகையில் பெற்றிருக்க வேண்டும்
3. பணியமர்த்தல் ஒப்பந்தத்தில் எழுத்துபூர்வமாக இந்த உருப்படிகளுக்கு சொந்தக்காரர் பொறுப்பேற்றிருக்க வேண்டும்
4. வாடகைக்கு குடியிருப்பவர், குத்தகைதாரர், உரிமம் பெற்றிருப்பவர் அல்லது பணியாளர்



# ஆப்ஷனல் காப்பீடுகள்



## விலை மதிப்பு மிக்கவைகளுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட

**மதிப்பு அடிப்படையில் காப்பீடு** வழங்கும் (வீட்டிலுள்ள பொருள்களுக்கு காப்பீடு திட்டத்தின் கீழ்): இந்த ஆப்ஷனல் காப்பீட்டில் உங்கள் வீட்டிலிருக்கும் விலை மதிப்புமிக்க பொருள்களான நகை, வெள்ளிப்பாத்திரங்கள், பெயின்டிங்குகள், கலையம்சம் பொருந்தியவை ஆகியவற்றிற்கு நீங்கள் ஆப்ஷனல் காப்பீடு பெற்றுக்கொள்ள முடியும்.



## தனிநபர் விபத்து காப்பீடு:

ஒருவேளை காப்பீடு செய்துகொண்டிருக்கும் அபாயம் காரணமாக வீட்டுக் கட்டடம் மற்றும்/அல்லது வீட்டிலிருக்கும் பொருள்கள் சேதமாவதுடன் சொந்தக்காரர் அல்லது அவர்/அவள் வாழ்க்கைத்துணை மரணமடைய நேர்ந்தால், எச்டிஎஃப்சி எர்கோ பிரதி நபருக்கு ரூ.5 இலட்சம் வீதம் இழப்பீடு வழங்கும்.

## கூடுதல் காப்பீடுகள்:

உங்கள் பாலிசியுடன் கீழ்க்கண்ட கூடுதல் காப்பீடுகளையும் சேர்த்துக்கொள்ளலாம்



ரிப்பேர் செலவினங்கள்




வாடகை வருமானம் இழப்பு அல்லது மாற்று இடத்திற்கு வாடகை செலவினங்கள்



வன்முறை தாக்குதல்கள்



ஆர்கிடெக்டுகள், சர்வேயர்கள் மற்றும் கன்சல்டிங் பொறியாளர்கள் கட்டணங் கிளெய்ம் தொகையில் 5% வரையில்



இடிபாடுகளை அகற்றும் செலவினங்கள் - கிளெய்ம் தொகையில் 2% வரை

## விலக்கல்கள்:

- சொந்தக்காரர் அல்லது சொந்தக்காரர் சார்பாக அல்லது சொந்தக்காரர் சம்மதத்துடன் வேண்டுமென்றே செய்த, தெரிந்து அல்லது நோக்கத்துடன் செய்த மற்றும் செய்யாத செயல்கள்.
- போர், படையெடுப்பு, அயல்நாட்டு எதிரியின் விரோதா பாவ நடவடிக்கைகள் அல்லது போர் போன்ற நடவடிக்கைகள் (அறிவிக்கப்பட்ட போராக அல்லது அறிவிக்கப்படாத போராக இருந்தாலும்), உள்நாட்டு போர், கலவரம், மக்கள் எழுச்சி, புரட்சி, கிளர்ச்சி அல்லது இராணுவ நடவடிக்கைகள், அதிகாரப் பறிப்பு ஆகியவை.
- அணு கழிவுகளால் அல்லது அணு எரிபொருள்கள் எரிப்பதால் உருவாகும் மாசுகள், கதிரியக்கம் காரணமான அயனியாக்கும் கதிர்வீச்சு அல்லது மாசுபடுதல் , அல்லது அணுக்கரு அசெம்பிளி அல்லது அணுக் கூறுகளின் அபாயம் ஏற்படுத்தும் ஆற்றலால் ஏற்படும் கதிரியக்கம், நச்சு, வெடித்தல் அல்லது அவை காரணமாக ஏற்படும் சேதங்கள்.
- மாசுபாடு அல்லது தூய்மைக்கேடு,
    1. இந்த மாசுபாடு அல்லது தூய்மைக்கேடு காப்பீடு செய்யப்பட்டிருக்கும் அபாயங்கள் அல்லது நிகழ்வுகளிலிருந்து எழுந்தவையாக இருக்க வேண்டும்,
    2. அல்லது காப்பீடு செய்யப்பட்ட நிகழ்வு ஒன்றிலிருந்து மட்டுமே மாசுபாடு அல்லது தூய்மைக்கேடு நிகழ்ந்திருக்க வேண்டும்.
- எந்த ஒரு எலக்டிரிகல் / எலக்டிரானிக் மெஷின், சாதனம், ஃபிக்ஸ்சர் அல்லது ஃபிட்டிங்குகளுக்கு நிகழ்ந்திருக்கும் இழப்பு, சேதம் அல்லது அழிவு அவை வரம்பு மீறி செயல்பட வைத்திருந்ததால், அதிக அழுத்தம், ஷார்ட் சர்க்யூடிங், வளைவு, சுயமாக வெப்பமடைதல் அல்லது மின் கசிவு காரணமாக அல்லது எதன் காரணமாக நிகழ்ந்திருந்தாலும்
- பொன் அல்லது செட்செய்யப்படாத விலையுயர்ந்த கற்கள், கையெழுத்துப் பிரதிகள், திட்டங்கள், வரைபடங்கள், ஆவணப் பத்திரங்கள், பொறுப்புகள் அல்லது ஆவணங்கள் அவை எதுவாக இருந்தாலும், நாணயங்கள் அல்லது காகித கரன்சி பணங்கள், காசோலைகள், வாகனங்கள் மற்றும் வெடிபொருள்களுக்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதம் குறிப்பிட்டு பாலிசியில் எழுதப்பட்டிருக்காத போது.
- காணாமல் போயிருக்கும் காப்பீடு செய்யப்பட்ட சொத்து அல்லது அது தவறான இடத்தில் வைக்கப்பட்டிருந்தால் அல்லது அது காணாமல் போவதற்கு ஒரு குறிப்பிட்ட காரணம் எதுவும் திட்டவட்டமாகத் தெரியவராத போது.
- உங்கள் வீட்டிலிருந்து அகற்றப்பட்டு வேரிடத்திற்கு மாற்றப்பட்ட காப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கு விளையும் இழப்பு அல்லது சேதம்.
- வருமான இழப்பு, தாமதத்தினால் விளையும் இழப்பு, சந்தை இழப்பு அல்லது வேறு காரணமான இழப்பு அல்லது மறைமுக இழப்பு அல்லது சேதம் அவை எப்படிப்பட்டதாக இருந்தாலும் எந்த வகையைச் சேர்ந்ததாக இருந்தாலும்.
- காப்பீடு செய்யப்பட்ட சொத்து பழுதுபார்க்கப்பட்டு அல்லது மீட்டமைக்கப்பட்ட பிறகு அதன் சந்தை விலையில் சரிவு ஏற்பட்டிருப்பது.
- உங்கள் வீட்டு கட்டட கட்டுமானத்தில் மேற்கொள்ளப்பட்ட சேர்க்கை, விரிவு அல்லது திருத்தி அமைத்தல் காரணமாக ஆரம்பமாகும் தேதியில் அல்லது பாலிசியைப் புதுப்பிக்கும் தேதியில் இருந்த கட்டட உட்பரப்பை விட கட்டட உட்பரப்பு 10% அதிகமாதல், இந்த அதிகரித்திருக்கும் இடத்திற்கு நீங்கள் கூடுதல் பிரீமியம் செலுத்தவில்லை என்றால் மற்றும் இவ்வாறு அதிகரித்திருக்கும் சேர்க்கை, விரிவு அல்லது திருத்தம் பாலிசி மேற்குறிப்பில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை என்றால்.
- கிளெய்ம் தயாரிக்க ஆகும் செலவினங்கள், கட்டணங்கள் அல்லது செலவுகள் ஏதாவது இருந்தால்.

## இழப்பீடு கோரிக்கைகள் (கிளெய்ம்கள்):

காப்பீடு செய்யப்பட்டிருக்கும் எந்த ஒரு நிகழ்வு காரணமாக இழப்பு ஏற்பட்டிருக்கும் பட்சத்தில், நிறுவனத்திற்கு உடனே தகவல் தெரிவித்துவிட வேண்டும் -

**எங்களைத் தொடர்புகொள்ள உதவும் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:**

### கால் சென்டர்

022-6234 6234 / 021-6234 6234

### மின்னஞ்சல் முகவரி:

care@hdfcergo.com

### முகவரி

எச்டிஎஃப்சி எர்கோ ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
கார்பொரேட் கிளெய்ம்ஸ் பிரிவு, 6வது தளம், லீலா பிசினெஸ் பார்க்,
அந்தேரி குர்ளா ரோடு, அந்தேரி (கிழக்கு), மும்பை - 400059.

## ஏன் எச்டிஎஃப்சி எர்கோ?

1.5+ கோடி எண்ணிக்கையில் திருப்தி அடைந்திருக்கும் வாடிக்கையாளர்கள்[@]

24 x 7 வாடிக்கையாளர் சேவை 10 மொழிகளில்

ஒளிவுமறைவின்மை

விரைந்து பரிசீலிக்கப்படும் சிக்கலில்லாத கிளெய்ம் செட்டில்மென்ட்

HDFC ERGO

**காப்பீடு சட்டம் 1938 பிரிவு 41 (தள்ளுபடி வழங்குதல் தடுப்பு):**

1. இந்தியாவிலுள்ள உயிர்கள் அல்லது சொத்துகள் சம்பந்தபட்ட அபாயங்கள் அவை எதுவாக இருந்தாலும் அதற்கான காப்பீடு பெற, புதுப்பிக்க அல்லது காப்பீட்டைத் தொடர தூண்டும் வகையில் எந்த ஒரு நபருக்கும் நேரடியாக அல்லது மறைமுகமாக ஊக்குவிக்கும் வகையில் கமிஷன் எதையும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது பாலிசிக்கான பிரீமியம் தொகையில் தள்ளுபடி வழங்கப்பட மாட்டாது அல்லது இவ்வாறு காப்பீடு பெறும், புதுப்பிக்கும் அல்ல்லது தொடர்ந்து வைத்திருக்கும் நபர் தள்ளுபடி எதையும் பெறக் கூடாது, விலக்காக காப்பீடு வழங்குபவர் தன் பிராஸ்பெக்டஸில் அல்லது அட்டவணையில் குறிப்பிட்டிருப்பவை மட்டுமே பொருந்தும்.
2. இந்த பிரிவுக்கு பங்கம் நிகழும் வகையில் முரணாக நடந்துகொள்பவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூபாய் பத்தாயிரம் வரையில் அபராதக் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும்.

பொறுப்புத்துறப்பு: மேலேயுள்ளவை விவரங்களுக்கு மட்டுமே. முழுமையான வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் பாலிசி ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளன. காப்பீடு குறித்த முழு விவரங்கள், வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் முழுமையான விவரங்களைத் தெரிந்துகொள்ளவும், காப்பீடு சம்பந்தப்பட்ட விலக்கல்கள் குறித்து அறிந்துகொள்ளவும் காப்பீடு செய்துகொள்பவர்கள் பாலிசி ஆவணத்தைக் கவனமாகப் படித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**ஹெச்டிஎஃப்சி எர்கோ ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

022 6242 6242 (Buy) hdfcergo.com HDFC ERGO Mobile App

வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் பொருந்தும். செப்டம்பர் 30, 2020 முதல் செயலில் உள்ள வாடிக்கையாளர்கள். ஹெச்டிஎஃப்சி எர்கோ ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட். ஐஆர்டிஏஐ பதிவு எண் 146. CIN: U66030MH2007PLC177117. பதிவு மற்றும் கார்ப்பொரேட் அலுவலகம் : முதல் தளம், ஹெச்டிஎஃப்சி ஹவுஸ், 165-166, பேக்பே ரெக்ளமேஷன், ஹெச். டி. பாரேக் மார்க், சர்ச்கேட், மும்பை - 400020. ஆபத்து காரணிகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து மேலும் விவரங்களுக்கு தயவுசெய்து விற்பனையை முடிக்கும் முன்பாக விற்பனைச் சிற்றேட்டை/தகவல் தொகுப்பு அறிக்கையை கவனமாகப் படிக்கவும். மேலே காட்டப்பட்டுள்ள வர்த்தக சின்னம் ஹெச்டிஎஃப்சி லிட். மற்றும் எர்கோ இன்டர்நேஷனல் ஏஜி-க்கு சொந்தமானது மற்றும் உரிமத்தின் கீழ் நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டுள்ளது. UIN: HDFC ERGO - Bharat Griha Raksha - IRDAN125RP0003V01202021. UID: 11651.